3G சேமிப்புகள்

கணக்கின் தன்மை	வாடிக்கையாளருக்கான நன்மைகள்	தொடக்க வைப்பும் கட்டணங்களும்	தகுதி	முக்கியமான விதிகளும் நிபந்தனைகளும்
விசேட சேமிப்புகள் எண்ணக்கரு	நீங்கள் பொருட் கொள்வனவு செய்யும் போதும் வேறு தேவைகளுக்காக பணத்தைச் செலவிடும் போதும் பணத்தைச் சேமிக்கும் பொருட்டு உங்கள் குடும்பத்தின் மூன்று தலைமுறைகளை இணைக்கும் வசதியை 3G சேமிப்புக் கணக்கு வழங்குகிறது. வாடிக்கையாளர் BOC பற்று அட்டையைப் பயன்படுத்தி பொருட்களை அல்லது சேவைகளை கொள்வனவு செய்யும் போது அக் கொள்வனவுக்காக செலவுசெய்யப்பட்ட தொகை ரூ.100/-, ரூ.,200/-, ரூ.500/- அல்லது ரூ.1,000/- [பதிவின்போது வாடிக்கையாளரால் தீர்மானிக்கப்பட்டவாறு] என்பவற்றின் மடங்குகளிலான அடுத்தகட்டப் பெறுமதிக்கு மட்டந்தட்டப்படும். அவ்வாறு மட்டந்தட்டப்படும் தொகைக்கும் கொள்வனவுக்காக செலவுசெய்யப்பட்ட தொகைக்கும் இடையிலான தொகை வாடிக்கையாளரின் கணக்கிலிருந்து பற்றுவைக்கப்பட்டு பின்னர் POS வாடிக்கையாளரால் குறிப்பிடப்படும் கணக்கில்/கணக்குகளில் வரவு வைக்கப்படும். [உதாரணம் - வாடிக்கையாளர் ரூ.923/- மதிப்புள்ள பொருட்களை கொள்வனவு செய்து பற்றட்டை மூலம் கொடுப்பனவை மேற்கொள்கிறார் எனின் கணினி அமைப்பு இந்த தொகையை 1000 ரூபாய்க்கு மட்டந்தட்டுவதோடு மீதிப் பணமான 77 ரூபாயை வாடிக்கையாளர் விரும்பும் கணக்கிற்கு மாற்றுகிறது	கட்டணங்கள் இல்லை	பற்று அட்டையும் அதில் போதுமான பணமும் வைத்துள்ள அனைத்து அட்டைதாரர்களும். **கணக்கைத் திறப்பதற்கான நடைமுறைகள்** 3G சேமிப்புக் கணக்குக்கான விசேட விண்ணப்பத்தை பூர்த்திசெய்து எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் கையளித்தல் வேண்டும். தேசிய அடையாள அட்டை / தேசிய அடையாள அட்டை இலக்கம் உள்ள செல்லுபடியான கடவுச்சீட்டு	கணக்குடன் தொடர்புடைய அனைத்து விதிகள் மற்றும் நிபந்தனைகள் பற்றி அறிய விண்ணப்பத்தைப் பார்க்கவும்.

காப்புறுதி வைப்பு / அங்கீகரிக்கப்படாத (தவறுதலான) கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் / செயற்படாக் கணக்குகள்

- வைப்புப் பொறுப்புகள், வைப்பாளர் ஒருவருக்கு அதிகபட்சம் 1,100,000 ரூபாய் வரையிலான நட்ட ஈட்டுக்கான பொருந்தக்கூடிய காப்புறுதியை செலுத்துவதன் மூலம் நாணயச் சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் காப்புறுதி செய்யப்பட்டுள்ளது.
- அங்கீகரிக்கப்படாத/தவறுதலான பரிவர்த்தனை ஒன்று கண்டறியப்பட்டால், அதனை உடனடியாக வங்கிக்கு அல்லது கணக்குப் பேணப்படும் கிளைக்கு தெரிவிக்க வேண்டும்.
- ஒரு (01) வருட காலத்திற்கு பணம் மீளப்பெறல்/கொடுப்பனவு செயற்பாடுகள் எதுவுமின்றி கணக்கு செயற்படுத்தப்படாமல் இருந்தால், ஒரு வருட முடிவில் குறித்த கணக்கு 'செயலற்ற' கணக்காக மாறும்.
- இவ்வாறான கணக்குகள் 10 வருடங்களுக்கு மேலாக செயற்படுத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் இல்லை என்றால், அந்த கணக்குகளில் உள்ள நிதி கைவிடப்பட்ட சொத்தாக கருதப்பட்டு இலங்கை மத்திய வங்கிக்கு மாற்றப்படும்.

உங்களுடைய பின்னூட்டங்களை எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

- பின்வரும் வழிகள் மூலம் வாடிக்கையாளர்கள் தங்கள் பின்னூட்டங்களையும் முறைப்பாடுகளையும் பகிர்ந்து கொள்ளலாம்;
- எங்கள் வாடிக்கையாளர் அனுபவ முகமைத்துவப் பிரிவு மூலம் உங்கள் பாராட்டுகள் / முறைப்பாடுகள் என்பவற்றை நீங்கள் பதிவு செய்யலாம். தானியங்கு அமைப்பு மூலம் உங்கள் கோரிக்கைகள் முன்னுரிமையுடன் கவனிக்கப்படும்.

தொலைபேசி: +94 11 220 4750 / +94 11 243 5814 தொலைநகல்: +94 11 243 5815 மின்னஞ்சல்: **bocexmgt@boc.lk** இணையத்தளம்: **https://www.boc.lk**

அஞ்சல்: வாடிக்கையாளர் அனுபவ முகாமையாளர், 22ஆவது மாடி, இலங்கை வங்கிக் கோபுரம், இலங்கை வங்கிச் சதுக்கம், இல. 1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.

எங்கள் கிளைகள், சேவைப் பிரிவு அல்லது அழைப்பு மையத்தைத் தொடர்பு கொள்ளுங்கள், எங்கள் கணக்குகள் அல்லது சேவைகள் தொடர்பான ஏதேனும் கருத்துகள்/சந்தேகங்கள் இருப்பின் எங்கள் கிளைகளை நாடலாம் அல்லது 1975 என்ற எண்ணின் ஊடாக அழைப்பு மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.